1971 டிசம்பர் 18]

திரு. எம். கந்தசாமி : தலைவர் அவர்களே, தொழுநோயானது மிகக் கொடுமையானது என்று இருப்பதால், தீவிரமாகச் சிகிச்சை செய்து உதவிசெய்ய, மேலும் பாவாமல் தடுத்து நிறுத்த நம்முடைய அரசு 'வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷன்' உதவியைப் பெற முயற்சித்து, அதிக உதவியைப் பெற்று அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஸேஷன்' மூலமாக வேறு பல உதவிகளைப் பெறலாம். ஆனால் இந்தத் துறையில் பொதுமக்களுக்குப் போதுமான தெளிவு ஏற்பட வேண்டும். ஏற்கனவே சிறுவயதிலேயேகூட சிறு புண், காயம் இவற்றிற்கு இடம் கொடுக்காமல் கவனமாக இருக்க வேண்டும். முதலிலே அப்படிக் கண்டிருந்தால், அப்படிப் பட்ட அடையாளங்கள் தெரிந்தால், சூடான எதையும் தொடாமல் இருக்க வேண்டும். அந்த வகையில் 'எஜுகேடிங் தி பப்ளிக்' என்ற முறையில் பொது மக்களுக்குத் தெளிவும், அறிவும் உண்டாக வேண்டும், அதற்குப் பிரசாரம் நடத்த வேண்டும். அந்த முறையில் அரசாங்கம் அக்கறை காட்டி வருகிறது.

சென்னை நகர வளர்ச்சி

***558 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) சென்னை நகர அபிவிருத்திக்கு ரூ. 136 கோடியில் திட்டம் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ரூ. 938 கோடிக்குத் தயாரிக்கப்பட்ட சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சிக்கான இருபதாண்டுக் காலத்திட்டம், 1971 ஜூன் திங்களில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதன் குறுகிய கால முதலீடு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 185 கோடியாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசிடமிருந்தும், உலக வங்கி போன்ற ஐக்கியநாடுகள் முகவரமைப்பிடமிருந்தும் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருக்கு இந்தத் திட்டத்தை அனுப்பியிருக்கிறோம். அதற்கு ஏதாவது பதில் வந்திருக்கிறதா ? நிதிகொடுக்க அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. அவர்கள் இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில், இன்னும் சில திங்கள்கள் கழித்து பதில் அளிப்பார்கள் என்று கருதுகிறேன்.

[1971 டிசம்பர் 18

THIRU K. M. SUBRAMANIAM : In view of certain urgency for improvement of the City just like Calcutta Corporation, has this Government represented to the Government of India to give a block grant of a few crores of rupees under the Metropolitan Improvement Scheme?

THE HON. THIRU K. ANBAZHAGAN : That comes under the Local Boards Ministry and the Hon. Minister for Education should reply to that.

திரு. கா. வேழவேந்தன் : இந்தச் சென்னைப் புறநகர் திட்டத்திலே சென்னை நகரைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளில் எந்த எந்தப் பகுதிகள் சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எப்பொழுது சேர்க்கப்படுகிற பகுதி, ஒட்டிய பகுதியாகத்தான் இருக்குமே ஒழிய, எட்டிய பகுதியாக இருக்காது. ஒட்டிய பகுதியைச் சேர்க்கும்போது, 150 சதுர மைலுக்குள் அடங்கிய பகுதிகள் வரும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத திட்டத்திலே, இப்பொழுது இருக்கிற சென்னை நகர எல்லைப் பகுதியில் தொழிற்சாலைகள் இருப்பதால், சுற்றுப்புறங்களில் அமைக்கும் முறையில், திட்டம் இருக்கிறதா? அப்படியானால், இனிமேல் வரும் இடைக் காலத்தில், அத்தகைய புதிய தொழிற் சாலைகளை நகரத்திற்குள்ளேயே ஏற்படுத்தாமல் வெளிப் புறங் களிலேயே அமைக்க வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்டது இந்தத் துணைக் கேள்வி. மூலக் கேள்வியின் நோக்கம், சென்னை நகரத்தை ஒருங்கிணைந்ததாகச் செய்ய, சாலைப் போக்குவரத்து, கழிவுநீர், குடிசை மாற்றம் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய திட்டம் என்ன என்பது பற்றியது; தனியார் அமைக்கும் தொழிற்சாலைகள் பற்றியது அல்ல. பொதுத் துறையின் அடிப்படையில் அமைகிற இந்த அமைப்புகள் பொருத்ததாகும். விரிவுத் திட்டம் வருகிறது. தொழிற்சாலை எந்தப் பகுதியில் இருப்பது நல்லது என்கிற பொருள்பற்றி தனிக் கருத்து அப்பொழுது உருவாகும்.

அரூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர்வீச்சுப்பிரிவு

***559 வினு—டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டத்தலைமை அரசினர் மருத்துவ மனையில் எக்ஸ்-ரே சாதனம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?